# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1817/65 - 2013 ජූලි මස 05 වැනි සිකුරාදා - 2013.07.05

*1817/65 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்

*2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.*

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,
நாணயச் சபைத் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்.

கொழும்பு,
2013, யூன் 7.

**2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டிவீதங்கள்) பணிப்புரை**

1. இப்பணிப்புரை 2013 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளில் உரிமம்பெற்ற ஒவ்வொரு நிதிக்கம்பனிகளுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும். எடுத்துக்காட்டல்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் எழுத்துமூலமான முன்னொப்புதல் இல்லாமல் எந்தவொரு நிதிக் கம்பனியும் – இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் ஒப்புதலை வேண்டி நிற்கும் அமைப்பியல் மாற்றங்கள்.

2.1 ஏதேனும் துணைக் கம்பனியினை, துணைக் கம்பனியின் துணைக் கம்பனி அல்லது இணைக் கம்பனியினை அல்லது இணைக் கம்பனியினை அமைத்தல் ;

2.2 வியாபாரத்தினை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ விற்றல் ;

2.3 நிதி வியாபாரம், வாடகைக் கொள்வனவு, குத்தகைக்கு விடுதல் அல்லது அடகு பிடித்தல் என்பவற்றுடன் நேரடியாகத் தொடர்புபடாத ஓர் புதிய வியாபார நடவடிக்கையினைத் தொடங்குதல் ;

2.4 வேறு ஏதேனும் நிறுவனம் அல்லது கம்பனியின் வியாபாரத்தை முழுமையாக அல்லது பகுதியளவில் கையேற்றல் ;

2.5 வேறு ஏதேனும் நிறுவனத்தினை அல்லது கம்பனியை ஒன்று சேர்த்தல், திரட்சிப்படுத்துதல் அல்லது இணைத்தல் ;

2.6 கம்பனியின் பெயரை மாற்றுதல் ;

2.7 கம்பனியின் முகாமைத்துவத்தினை மீளமைத்தல்.

*பணிப்பாளரின் ஒப்புதலை வேண்டி நிற்கும் அமைப்பியல் மாற்றங்கள்.*

3. பணிப்பாளரின் எழுத்துமூலமான முன்னொப்புதல் இல்லாமல் எந்தவொரு கம்பனியும் -

3.1 அஞ்சல், கூரியர் பணிகள், உணவுப் பரிமாற்றப் பணிகள், வீட்டுப் பொறுப்பு மற்றும் சுகாதாரப் பணிகள், வளாகப் பாதுகாப்பு, சம்பளப்பட்டியல் மற்றும் செயலாளர் தொழிற்பாடுகள் தவிர்ந்த ஏனைய ஏதேனும் ஓர் தொழிற்பாட்டை வெளி நபரிடம் ஒப்படைத்தல் ;

3.2 பங்கு மூலதனத்தை அதிகரித்தல் அல்லது குறைத்தல் ;

3.3 ஓர் துணை கம்பனியின் அல்லது இணைக் கம்பனியின் பங்கு மூலதனத்தில் அதனது முதலீட்டினை அதிகரித்தல் ;

3.4 ஓர் துணை கம்பனியின் அல்லது இணைக் கம்பனியின் வியாபாரத்தினை முழுமையாக அல்லது பகுதியளவில் விற்றல் ;

3.5 நிறுவனத்தின் அகவிதிகளை மாற்றுதல் ;

3.6 ரூபா ஐந்து மில்லியனைவிட (5,000,000 ரூபா) உயர்வான புத்தகப் பெறுமதியினைக் கொண்ட சொத்துக்களை தற்போது நிலவும் சந்தைப் பெறுமதியிலும் குறைவான விலையில் விற்றல் அல்லது மாற்றம் செய்தல் ;

3.7 பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் எவரேனும் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலரின் பதவியில் மாற்றம் செய்தல்.

*சொத்துக்களின் மாற்றம்/விற்றல் மீதான வரையறைகள்.*

4. எந்தவொரு நிதிக் கம்பனியின் மாற்றல் செய்பவருக்குச் சாதனமான ரீதியில் அமையக்கூடிய நாணய ரீதியிலான பரிசீலனைகளுக்காகவன்றி, அதன் சொத்துக்களை எந்தவொரு நிறுவனத்திற்கும் மாற்றல் செய்யவோ அல்லது விற்கவோ கூடாது.

*பணிப்பாளர் சபைகளின் ஏதேனும் அங்கத்தவர் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பதவி விலகல்கள்.*

5. பணிப்பாளர் சபைகளின் அங்கத்தவர் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலர் பணிப்பாளரின் முன்னொப்புதல் இல்லாமல் கம்பனியிலிருந்து பதவி விலக முடியாது.

*வரைவிலக்கணங்கள்.*

6. இப்பணிப்புரையில் -

6.1 ''நிதித் தொழில்'' , ''துணைக் கம்பனி'' மற்றும் ''இணைக் கம்பனி'' என்பன 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 74 ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள வரைவிலக்கணத்துடன் ஒத்தவையாகும் ;

6.2 ''தற்போதுள்ள சந்தைப் பெறுமதி'' எனப்படுவது இயலுமையுடைய வாங்குபவருக்கும் இயலுமையுடைய விற்பனையாளருக்குமிடையேயான இயலக்கூடிய ஆற்றல் வாய்ந்த கொடுக்கல்வாங்கலில் பரிமாற்றப்படும் ஓர் சொத்திற்கு உரிமம்பெற்ற மதிப்பீட்டாளர் ஒருவரால் தீர்மானிக்கப்பட்ட மதிப்பீட்டு விலையாகும் ;

6.3 ''பணிப்பாளர்'' எனப்படுபவர் இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராவர்.

*பணிப்புரை நீக்கம்.*

7. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரை மற்றும் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (சொத்துக்களின் மாற்றம்) பணிப்புரை என்பன இத்தால் நீக்கப்படுகிறது.

7 - 624

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.